மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்படும் குடும்ப நல நிலையம்.

29—(* வினா எண் 4847) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இந்திய மருத்துவச் கழகம் நடத்தி வந்த குடும்பநல நிலையம் 1-4-85 முதல் மூடப்பட்டுவிட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய மருத்துவக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையினால் மூடப்பட்டதாகத் தெரிகிறது.

(இ) சென்னையில் குடும்பநலப் பிரிவுகள் மாநகராட்சியால் நடத்தப்படுவதால் இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்பட்ட குடும்பநல நிலையத்தையும் சென்னை மாநகராட்சியே எடுத்து நடத்த இயலுமா என்பது குறித்து, அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, முதலிலே தங்களுக்கு வணக்கமான ஒரு சப்மிஷன். 1-4-85 லே கொடுத்த கேள்வி இது. $1\frac{1}{2}$ வருஷத்திற்குப் பிறகு வந்திருக்கிறது. இப்படி பல கேள்விகள் வருடக்கணக்காகித்தான் வந்து கொண்டு இருக்கின்றன என்பதைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நிதி நெருக்கடியினால் இந்திய மருத்துவக் கழகம் அதை மூடிவிட்டது, ஆனால் மாநகராட்சி அதை எடுத்துக் கொண்டுள்ளது என்று கூறுகிறார்கள். இப்போது அந்த குடும்பநல நிலையத்திற்குள் இருக்கும்படியான வசதிகள் என்ன ? எவ்வளவு பேர்களை அங்கே அட்மிட் பண்ணி, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும், மற்ற உதவிகள் செய்ய முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி எடுத்துக் கொண்டுவிட்டதாக நான் சொல்லவில்லை. மாநகராட்சி எடுத்து நடத்த இயலுமா என்று அரசு கேட்டிருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

1986 நவம்பர் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இந்தக் கேள்வியை கேட்டது 20-8-85 அன்று. பதில் வந்தது 12-5-1986 அன்று. இந்தத் துறையில் எந்தக் காலதாமதமும் கிடையாது.

மூலிகை உற்பத்திக்கு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை.

30 —(* வினா எண் 7149) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) தொகையின் அளவு உயர்த்தப்படுமா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப்பண்ணைகள் மூலம் அரசுக்கு ஆண்டுக்கு வரும் மூலிகையின் அளவு என்ன ? இதனால் கிடைக்கும் வருவாய் என்ன ? அந்தப் பண்ணைகள் உண்மையிலேயே மூலிகை உற்பத்திக்காகத்தான் பயன்படுகிறதா என்று கண்காணிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்வதாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய தொகுதியான திருவில்லிப்புத்தூரிலே உள்ள செண்பகத் தோப்பில் உள்ள ஆண்டாள் கோயில் நிலத்தை, அதாவது 33 ஏக்கரை லீசுக்கு அதாவது மூலிகை பயிரிடுவதற்காக லீசுக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதற்கு ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால்? அங்கே மூலிகை பயிரிடுவது கிடையாது. அப்பேர்ப்பட்ட அந்த விஷமிகளை எல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். மூலிகை உற்பத்திக்காக அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் தொகை எவ்வளவு என்று கேட்டிருந்தார்கள். அப்படி பணத்தை மூலிகை உற்பத்திக்காக ஒதுக்கவில்லை என்றுதான் பதில் சொல்லி இருக்கிறேன்.